## பிரதம மாவட்ட நீதிமன்றம், திருவள்ளூர்.

இந்நீதிமன்ற உதவியாளர் திரு. மோகன் அவர்களால் பிரமாணம் செய்விக்கப்பட்டு இந்திய சாட்சிய சட்டம் 1871, பிரிவு 1-ன் கீழ் மனுதாரர்/ எதிர்மனுதாரர் தரப்பு 1வது சாட்சியாக விசாரிக்கப்பட்டு 2026-ம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 12 ஆம் நாள் பதிவு செய்யப்பட்டது.

பெயர்.................................................. மாவட்டம்.......................................................

கிராமம்........................................................... தந்தை /கணவர் பெயர்..........................................

தாலுக்கா........................................................... தொழில்.................................................................

-----------------------------------------------------------------------------------------------

# LAOP No. 109/2022

# 12/02/2026

**ம.த.சா.1 - திரு. சரவணன் த/பெ. சந்திரன்**

<u>சாட்சி சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு மனுதாரர் தரப்பில் முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறார்.</u>

**<u>முதல் விசாரணை</u>**

நான் ஸ்ரீ சத்யசாய் வேர் ஹவுசிங் அண்ட், லாஜிஸ்டிக் பார்க் பிரைவேட் லிமிடெட் இயக்குநர் ஆவேன். நான் இவ்வழக்கின் மனுதாரர் ஆவேன். நான் மனுதாரர் தரப்பு சாட்சி 1. என் தரப்பு சாட்சியத்தை நான் நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். என் நிரூபண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் எனக்கு நன்றாக தெரியும். என் நிரூபண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். அதனை படித்து பார்த்து தான் கையெழுத்து செய்தேன். என் தரப்பில் கீழ்க்கண்ட ஆவணங்களை நான் தாக்கல் செய்கிறேன்.

1. 31/10/2008 தேதியிட்ட நிறுவன பதிவு சான்றிதழ் நகல் (அசலுடன் ஒப்பிட்டு பார்க்கப்பட்டு சரியாக இருந்ததன் பேரில் அசல் சாட்சி வசம் ஒப்படைக்கப்படுகிறது) **ம.த.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

2. 10/12/2008 தேதியிட்ட கிரைய ஆவணத்தின் சான்றிட்ட நகல் (ஆவண எண் 8322/ 2008) **ம.த.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

3. 10/12/2008 தேதியிட்ட கிரைய ஆவணத்தின் சான்றிட்ட நகல் (ஆவண எண் 8323/ 2008) **ம.த.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

4. 10/12/2008 தேதியிட்ட கிரைய ஆவணத்தின் சான்றிட்ட நகல் (ஆவண எண் 8324/ 2008) **ம.த.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

5. 10/12/2008 தேதியிட்ட கிரைய ஆவணத்தின் நகல் (ஆவண எண் 8325/2008) **ம.த.சா.ஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

6. ஸ்ரீ சத்யசாய் வேர் ஹவுசிங் அண்ட், லாஜிஸ்டிக் பார்க் பிரைவேட் லிமிடெட் பெயரிலுள்ள பட்டா நகல் ( பட்டா எண் 1506) **ம.த.சா.ஆ.6** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

7. நாகலட்சுமி மற்றும் ராமராஜ் ஆகியோர் பெயரிலுள்ள மின் இணைப்பு பயன்பாட்டு அட்டைகள் நகல் ( 5 எண்ணிக்கைகள்) ( அசலுடன் ஒப்பிட்டு பார்க்கப்பட்டு சரியாக இருந்ததன் பேரில் அசல் சாட்சி வசம் ஒப்படைக்கப்படுகிறது) **ம.த.சா.ஆ.7** வரிசை ஆக குறியீடு செய்யப்படுகிறது.

8. பொன்னேரி தாசில்தார் வழங்கிய தடையில்லா சான்றிதழ் நகல் **ம.த.சா.ஆ.8** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

9. 20/07/2020 தேதியிட்ட தமிழ்நாடு அரசிதழ் வெளியீடு 1ஆம் எதிர்மனுதாரரால் வழங்கப்பட்ட அறிவிப்பு ஆணை நகல் **ம.த.சா.ஆ.9** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

10. 26/09/2020 1ஆம் எதிர்மனுதாரரால் வழங்கப்பட்ட கடிதத்தின் நகல் **ம.த.சா.ஆ.10** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

11. 04/11/2020 தேதியிட்ட தமிழ்நாடு அரசிதழ் வெளியீடு 1ஆம் எதிர்மனுதாரரால் வழங்கப்பட்ட அறிவிப்பு ஆணை நகல் **ம.த.சா.ஆ.11** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

12. 02/02/2021 தேதியிட்ட தீர்ப்பாணை எண் 09/2020 நகல் **ம.த.சா.ஆ.12** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

13. 15/03/2021 தேதியிட்ட கோரிக்கைதாரர் 1ஆம் எதிர்மனுதாருக்கு கொடுத்த கடிதம் **ம.த.சா.ஆ.13** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

14. 18/03/2021 தேதியிட்ட கோரிக்கைதாரர் 1ஆம் எதிர்மனுதாருக்கு கொடுத்த கடிதம் **ம.த.சா.ஆ.14** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

15. 03/05/2018 தேதியிட்ட கிரைய ஆவணத்தின் சான்றிட்ட நகல் (ஆவண எண் 2658/2018) **ம.த.சா.ஆ.15** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

16. 22/06/2018 தேதியிட்ட கிரைய ஆவணத்தின் சான்றிட்ட நகல் (ஆவண எண் 3867/2018) **ம.த.சா.ஆ.16** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

17. 11/07/2018 தேதியிட்ட கிரைய ஆவணத்தின் சான்றிட்ட நகல் (ஆவண எண் 4331/ 2018) **ம.த.சா.ஆ.17** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

18. 23/04/2018 தேதியிட்ட கிரைய ஆவணத்தின் சான்றிட்ட நகல் (ஆவண எண் 2348/2018) **ம.த.சா.ஆ.18** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

19. 05/08/2016 தேதியிட்ட கிரைய ஆவணத்தின் சான்றிட்ட நகல் (ஆவண எண் 6941/2016) **ம.த.சா.ஆ.19** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

20. 06/03/2017 தேதியிட்ட கிரைய ஆவணத்தின் சான்றிட்ட நகல் (ஆவண எண் 614/2017) **ம.த.சா.ஆ.20** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

21. 10/06/2025 தேதியிட்ட நிறுவன குழுமத்தின் தீர்மானம் **ம.த.சா.ஆ.21** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

22. வரைபடம் **ம.த.சா.ஆ.22** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

23. கூகுள் மேப் மற்றும் கூகுள் மேப்பிலிருந்து எடுக்கப்பட்ட கோரிக்கைதாரரின் நிலங்களின் புகைப்படங்களுடன் கூடிய பென்டிரைவ் **ம.த.சா.ஆ.23** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

24. பாரதிய சாக்ஷிய அதிநயம் பிரிவு 63(4) ன் கீழான சான்றிதழ் **ம.த.சா.ஆ.24** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

25. எனது ஆதார் அடையாள அட்டை நகல் (அசலுடன் ஒப்பிட்டு பார்க்கப்பட்டு சரியாக இருந்ததன் பேரில் அசல் சாட்சி வசம் ஒப்படைக்கப்படுகிறது) **ம.த.சா.ஆ.25** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**<u>அரசு வழக்கறிஞர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

கையகப்படுத்தப்பட்ட நிலங்கள் அனைத்தும் சென்னை எல்லை சாலை திட்டத்திற்காக கையகப்படுத்தப்பட்டது என்றால் சரிதான். பொதுமக்களின் போக்குவரத்து நெரிசலை குறைப்பதற்காக நிலம் கையகப்படுத்தப்பட்டது என்றால் சரிதான். வணிக பயன்பாட்டிற்காக

மேற்படி நிலங்கள் கையகப்படுத்தப்படவில்லை என்றால் சரியல்ல. வணிக நோக்கத்திற்காக கையகப்படுத்தப்பட்டுள்ளது என்பதற்கான ஆவணம் எதுவும் குறியீடு செய்யவில்லை என்றால் சரிதான். ஒரு செண்ட் நிலம் ரூபாய் 25,000/- விற்பனைஆகிறது என்பதற்கான ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. தாக்கல் செய்துள்ளேன். நீதிமன்றத்தில் தாக்கல் செய்த ஆவணங்களை விசாரணை அதிகாரியிடம் தாக்கல் செய்யிவில்லை என்றால் நாங்கள் தாக்கல் செய்தோம் அவர்கள் அதை ஏற்றுக்கொள்ளவில்லை. நான் விசாரணை அதிகாரியிடம் மேற்படி ஆவணங்களை தாக்கல் செய்தேன் என்பதை நிரூபிப்பதற்கு ஏதாவது ஆவணங்கள் உள்ளனவா என்றால் இல்லை. கையகப்படுத்தப்பட்ட நிலங்கள் வளர்ச்சி அடைந்த பகுதி என்பதை நிரூபிப்பதற்கு ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேனா என்றால்தாக்கல் செய்துள்ளேன். என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் 19ஆவது பத்தியில் நிலங்களுக்கு செல்லவிடாமல் இருபுறமும் 12 அடி உயரமுள்ள கோட்டை சுவர் கட்டிவிட்டார்கள் என்பதற்கு ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். அவ்வாறு எந்த ஆவணமம் தாக்கல் செய்யவில்லை என்றாலும் இழப்பீடு அதிகமாக பெறவேண்டும் என்பதற்காக நான் தவறுதலாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால்சரியல்ல. புதிய நில எடுப்பு சட்டத்தில் எனக்கு சரியான இழப்பீடு வழங்கப்பட்டுள்ளது என்றாலும் பொது நோக்கத்திற்காக கையகப்படுத்தப்பட்ட நிலம் என்பதால் எனக்கு அதிகப்படியான இழப்பீடு கிடைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல.

Typed to my dictation and correction
by me in open court read over to the
witness and admitted by him as correct.

Sd/- J.Juliet Pushpa
Principal District and Sessions Judge,
Tiruvallur.